# வரிக்கொடுமை நீக்குக

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்

பாண்டிநாட்டில் புதிய பேரரசனாக முடிசூடிய அறிவுடைநம்பி நாட்டை வளமாக்கும் பெரும் கனவில் மூழ்கியுள்ளார்.







நிதித்தலைவர்: மக்களிடம் வரியை மிகுதிப்படுத்துவதைத் தவிர இப்போது வேறு வழியில்லை மன்னவா.
அறிவுடை நம்பி: அமைச்சரே! நிதித் தலைவர் முடிவு செய்தபடி ஆவன செய்து நிதியைப்பெருக்குங்கள்.
3


உழவர்கள், வணிகர்கள் கூட்டமாகப் புலவர் பிசிராந்தையாரைச் சந்திக்கின்றனர்.
உழவர்: ஐயா இது என்ன கொடுமை! திடீரென அரசர் வரியை மும்மடங்காக்கிவிட்டார். நாங்கள் உழவு செய்வதா அல்லது சாவதா? அரசரின் மதிப்பைப்பெற்ற நீங்கள் தான் இதனைச் சரிசெய்யவேண்டும்.
பிசிராந்தையார்: கவலைப்படாதீர்கள்! நான் மன்னனிடம் பேசிப்பார்க்கிறேன்.
4


அறிவுடை நம்பி:
வாருங்கள் ஆந்தையாரே! உங்கள் நண்பர் கோப்பெருஞ்சோழன் மடல்விடுத்தாரா? நாடு வளமாக உள்ளதா?
பிசிராந்தையார்:
சோழருக்கும், சோழநாட்டிற்கும் வளத்திற்குக்குறைவில்லை. ஆனால் நம் பாண்டிநாடு வரிச்சுமையால் வளமிழந்து தத்தளிப்பதை நீங்கள் உணரவில்லையா?
அறிவுடை நம்பி:
நாட்டின் வளம் பெருகத்தானே வரியைமிகுவித்துள்ளோம். நான் கொடுங்கோல் ஆட்சியா செய்கிறேன்? மக்கள் நலனுக்காக வரியை உயர்த்துவதில் என்ன தவறு?
5


பிசிராந்தையார்:
அன்று கோவலனைக் கொன்றபோதும் நெடுஞ்செழியன் கள்வனைக் கோறல்கடுங்கோலன்று என்று சொன்னார். இப்போது நீங்கள் வேறு மாதிரி கூறுகிறீர்கள். மீண்டும் ஒரு தவறு நிகழக்கூடாது.
அறிவுடை நம்பி: நான் தவறு செய்தால் சுட்டிக்காட்டுங்கள்.
6







முனைவர் இ.ஜெ.சுந்தர் கரோனா தொற்றில் மருத்துவமனையில் இருந்தபோது இப்புறநானூற்றுப் புதையலை நமக்குத் தந்துள்ளதற்கு நன்றி.